நாகர்கோவில் நகராட்சி அண்ணா பேருந்து நிலைய தற்போதைய நெருக்கடியை தவிர்க்கும் பொருட்டு இதே பகுதியில் 88 சென்ட் நிலத்தில் ரூ. 15 லட்சம் செலவில் ஒரு தற்காலிகப் பேருந்து நிலையம் அமைக்கப்பட்டு, 1987 அக்டோபர் மாதம் முதல் செயல்பட்டு வருகிறது.

இது தவிர பெருமாள் குளம் சர்வே 2.2ல் 9 ஏக்கர் நிலத்தில் ரூ. $1\frac{1}{2}$ கோடி செலவில் தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின்கீழ் புதிய பேருந்து நிலையம் அமைக்கத் தீர்மானிக்கப்பட்டு, முதல் கட்டமாக 7 இலட்சம் ரூபாய் அனுமதிக்கப்பட்டுள்ளது. குறிப்பிட்ட பேருந்து நிலையத்தின் வரைபடங்கள், மதிப்பீடுகள் முதலியன கிர்லாஸ்கர் கன்சல்டன்ஸ் நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. பேருந்து நிலையக் கட்டுமானப் பணி விரைவில் ஆரம்பிக்கப்படும்.

9.40 மணி

மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி.

* 9032 திரு. என். பழனிவேல் :

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திண்டுக்கல் காயிதே-மில்லத் மாவட்டத்திற்கு தனியாக மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி அமைக்கும் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமுலுக்கு வரும்?

மாண்புமிகு பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) திண்டுக்கல் காயிதே மில்லத் மாவட்டத்திற்கென பிரத்தியேகமாக மத்திய கூட்டுறவு வங்கி பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்திய தலைமை வங்கியிடமிருந்து வங்கியியல் பணிகளை ஆற்ற உரிமம் (licence) கிடைக்கப்பெற்ற பின்னர் இவ்வங்கி தனது வங்கியியல் பணிகளை துவங்கும்.

திரு. என். பழனிவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, திண்டுக்கல் காயிதே மில்லத் மாவட்டம் பிரிந்து நீண்ட நாட்கள் ஆகின்றது. இன்றைக்கு மத்தியக் கூட்டுறவு வங்கி மதுரையோடு இருக்கிறது. மத்திய வங்கியினுடைய தலைமை வங்கியின் அனுமதி கிடைத்த பிறகு இங்கே ஆரம்

பிக்கப்படுமென்று அமைச்சரவர்கள் கூறுகிறார்கள். எப்போது அந்த அனுமதி கிடைக்கும் என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல் காயிதே மில்லத் மாவட்டத்தினுடைய துணைப் பதிவாளர் 1–8–1989-ம் தேதியன்று அந்த வங்கிக்கான பதிவினைச் செய்திருக்கிறார்கள். அதனைத் தொடர்ந்து 6–10–1989-ம் தேதியன்று பேரவைக் கூட்டம் கூட்டப்பட்டிருக்கிறது. வங்கி நடவடிக்கைகள், பேங்கிங் ஆக்டிவிடீஸ் தொடங்குவதற்கு ரிசர்வ் வங்கியினுடைய அனுமதி தேவைப்படுகிறது. அதற்காக நபார்ட் மூலமாக ரிசர்வ் வங்கிக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. அது விரைவில் கிடைக்குமென்று நம்புகிறோம். கிடைத்தவுடன் வங்கி அதன் பணியினைத் தொடங்கும்.

திரு. என். பழனிவேல் : பேரவைத் தலைவர் அவர்களே, அப்படி அந்த வங்கியை ஆரம்பிக்கும்போது இன்றைக்கு மதுரை மத்திய கூட்டுறவு வங்கியில் பணி புரியக்கூடிய ஊழியர்களையே பிரித்து காயிதே மில்லத் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிக்கு ஆட்களை நியமிப்பார்களா அல்லது புதிதாக ஆட்களை வங்கிக்குத் தேர்ந்தெடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : பேரவைத் தலைவர் அவர்களே, அவைகள் எல்லாம் காலப் போக்கில் பரிசீலிக்கப்படும்.

விற்பனை விளைப்பொருள் கூடத்திற்குக் கட்டிடம் கட்டுதல்.

* 5181 திரு. ச. அழகுவேலு : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

தென் ஆற்காடு மாவட்டம், விக்கிரவாண்டியில் விற்பனை விளைபொருள் கூடத்திற்குக் கட்டிடம் கட்ட அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே,

தென்னாற்காடு மாவட்டம், விக்கிரவாண்டியில் ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் கட்ட நிலம் வாங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS